# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
**Tamilnadu Government Employees' Association**
(பதிவு எண் 237/84)
**தோழர் எம்.ஆர்.அப்பன் இல்லம்**
எண். 46, தோழத் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை 600 005.
28441286 / 28440938 பேக்ஸ் : 28443601 e-mail : tngeags@gmail.com



மாநிலத் தலைவர்
**மு.சுப்பிரமணியன்**

பொதுச் செயலாளர்
**மு.அன்பரசு**

மாநில துணைத் தலைவர்கள்
**ந.குமாரவேல்**
**ஆ.செல்வம்**
**எஸ்.தமிழ்ச்செல்வி**
**சு.பார்த்திபன்**
**மொ.ஞானத்தம்பி**
**மு.சுப்பிரமணியன்**

மாநிலப் பொருளாளர்
**எம்.தங்கராஜ்**

மாநிலச் செயலாளர்கள்
**இரா.பன்னீர்செல்வம்**
**சி.ஆர்.இராஜகுமார்**
**என்.ஜனார்த்தனன்**
**தி.கலைச்செல்வி**
**எம்.சௌந்தரராஜன்**
**ஏ.பெரியசாமி**


ஊடக செய்தி 29 / 2017 நாள் : 23.11.2017

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநிலத் தலைவர் மு,சுப்பிரமணியன்.
பொதுச் செயலாளர் மு.அன்பரசு ஆகியோர் இணைந்து வெளியிடும் பத்திரிகை செய்தி

## ஊடகச் செய்தி

**கல்வி, வேலை வாய்ப்புகளில் தமிழக மாணவர்கள் இளைஞர்களுக்கு அநீதி, சமூகநீதிக்கு சவக்குழி, பணம், பதவி அதிகார சுகங்களுக்காக தாரை வார்க்கப்படும் தமிழக மக்கள் நலன்கள்**

**தமிழக முதல்வர் உடனடியாக தலையிட்டு உரிய சட்டத் திருத்தம் மேற்கொள்ள தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் வலியுறுத்தல்**

மகாபாரத சூதாட்டத்தில் தன் நாட்டையும், மக்களையும், சொந்த மனைவியையுமே சகுனியிடம் இழந்த ராஜாவைப் போல பணம், பதவி, அதிகார சுகம் என்ற சூதாட்டத்தில், தமிழக மக்களின் நலன்கள் ஒவ்வொன்றாக பலிபீடம் ஏற்றப்படுகின்றன என்பது அடுத்தடுத்து வரும் செய்திகளிலிருந்து அறிந்து கொள்ள முடிகிறது. காவிரியில் தொடங்கி, ஜல்லிக்கட்டு, நீட் தேர்வு, மீனவர் பிரச்சனை என தொடர்ந்து தமிழக மக்களுக்கு இழைக்கப்பட்டு வரும் துரோகங்களின் பட்டியலில் பாலிடெக்னிக் கல்லூரிகளில் விரிவுரையாளர் தேர்வுக்கு தமிழே தெரியாத பிற மாநிலத்தவர் பேர் சேர ஏதுவாக விதிகள் வளைக்கப்பட்டுள்ள நிலையில், அடுத்த அம்பாக தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்தும் குரூப்-4 தேர்வில் வெளி மாநிலத்தவர்களும் விண்ணப்பிக்கலாம் என அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

தேர்வாணையத்தின் இந்த அறிவிப்பை பல தலைவர்களும் விமர்சித்துள்ள நிலையில் ஆளும் கட்சித் தரப்பில் இதனால் தமிழக இளைஞர்கள் பாதிக்கப்பட மாட்டார்கள் என்றும், தமிழகத்தின் இடஒதுக்கீட்டுக்கு இது தடையாக இருக்காது என்றும் சப்பைகட்டு கட்டடப்படுகிறது. இந்திய

# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
## Tamilnadu Government Employees' Association

பதிவு எண் 237/84

**தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்**

எண் : 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.
தொலைபேசி எண் : 28441286, 28440938, 28443886 பேக்ஸ் : 28443601


அரசியலமைப்புச் சட்டம், பிரிவு 309ன்படி, பொதுத் துறையில் நியமிக்கப்படும் பணியாளர்களின் நியமனம், பணி நிபந்தனைகள் மற்றும் பதவிகளுக்கான விதிகளை தமிழ்நாட்டுக்கான சட்டமாக இயற்றும் பொருட்டு, 2016ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) குறித்த சட்டமுன்வடிவு 2016ஆம் ஆண்டு சட்டமன்றப் பேரவையில் வைக்கப்பட்டு உறுப்பினர்களின் ஒப்புதலுக்குப் பின்னர் 15.9.2016ம் தேதி அது “தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016'' ஆக நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்த சட்ட முன்வடிவு சட்டமன்ற உறுப்பினர்களின் ஒப்புதலுக்காக கொடுக்கப்பட்டபோது, அதில் தமிழக இளைஞர்களின் நலன்களுக்கு எதிராக சேர்க்கப்பட்டுள்ள பிரிவு 20 “தகுதிகள்'' தலைப்பில், உப பிரிவு 7-ஐ யாரும் எதிர்த்துரைக்காததால் அது சட்டமாக இயற்றப்பட்டுள்ளது. சட்டப்பிரிவு 20ன் உப பிரிவு (7) கீழ்க்கண்டவாறு வரையறுக்கப்பட்டுள்ளது.

“20(7) மாநிலத்தின் பதவி ஒன்றிற்கு பணியமர்த்தம் செய்யப்படுவதற்கான நபர் ஒருவர் -

(அ) இந்தியக் குடிமகன் ஒருவராக அல்லது

(ஆ) நேபாளத்தின் குடிமகன் ஒருவராக

(இ) பூடானின் குடிமகன் ஒருவராக

(ஈ) இந்தியாவில் நிரந்தரமாக குடியேற வேண்டும் என்கின்ற நோக்கத்துடன் பாகிஸ்தான், பர்மா, இலங்கை அல்லது கிழக்கு ஆப்பிரிக்க நாடுகளாகிய கென்யா, உகாண்டா, ஐக்கிய குடியரசாகிய தான்சானியா சாம்பியா, மாளவியா, ஸெய்ரா மற்றும் எத்தியோப்பியாவிலிருந்து இந்திய வம்சா வழியினராக இருத்தல் வேண்டும்.

வரம்புரையாக, ஆனால் மாநில (ஆ), (இ) மற்றும் (ஈ) இனங்களிலிருந்து வரும் நபர் ஒருவருக்கு அவர் சார்பாக மாநில அரசால் அளிக்கப்பட்டிருக்கிற தகுதிச் சான்றிதழ் ஒன்றை வைத்திருக்கின்ற நபர் அவர் ஒருவராக இருத்தல் வேண்டும்.

மேலும் வரம்புரையாக, நபர் ஒருவர் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் அல்லது பிற நியமன அதிகார அமைப்பால் நடத்தப்படும் தேர்வு அல்லது நேர்காணலுக்கு அவருடைய தகுதிச் சான்றிதழ் தேவையானதாக இருக்கின்றது என்கின்ற நேர்வில் அனுமதிக்கப்படலாம் மற்றும் மாநில அரசில் வழங்கப்பட்டதாக உள்ள தேவையானதாக உள்ள சான்றிதழுக்கு உட்பட்டு அவர் தற்காலிகமாக பணியமர்த்தப்படலாம்.''

ஏற்கெனவே தமிழ்நாட்டில் இலட்சக்கணக்கான இளைஞர்கள் வேலை வாய்ப்பின்றி தவிக்கும் சூழ்நிலையில், தமிழகத்தின் அரசியல் ஸ்திரமற்ற தன்மை மற்றும் பிறசூழ்நிலைகள் காரணமாக பெரு நிறுவனங்கள் தொழில் தொடங்க முன்வராத நிலையில், தமிழக மாணவர்கள்/இளைஞர்கள் பத்தாம் வகுப்பு படித்திருந்தால் குரூப்-4 தேர்வெழுதி ஏதேனும் ஓர் அரசுத் துறையில் சேர்ந்துவிடலாம் என்று எண்ணியிருந்த எண்ணத்திலும் இப்போது மண் விழுந்திருக்கிறது.

பொதுமக்களின் நலன்களுக்காக அயராது பாடுபடுவதாக சொல்லிக்கொண்டு

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
Tamilnadu Government Employees' Association
பதிவு எண் 237/84
தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்
எண் : 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.
தொலைபேசி எண் : 28441286, 28440938, 28443886 பேக்ஸ் : 28443601

லட்சக்கணக்கில் ஊதியம் பெறும் 234 சட்டமன்ற உறுப்பினர்களில் ஒருவர்கூட சட்டமுன்வடிவிற்கு எதிர்ப்பு தெரிவிக்காமல் அதை சட்டமாக்கவிட்டதற்கு அவர்கள் தமிழ்நாடு மாணவர்களிடத்திலும் இளைஞர்களிடத்திலும் நிபந்தனையற்ற மன்னிப்பு கோருவதுடன், இந்த சட்டத்தில் உள்ள பிரிவு 20(7)ல் திருத்தம் செய்து முழுக்க முழுக்க தமிழக இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு பெறும் வகையில் உடனடியாக மாறுதல் செய்யப்பட வேண்டும்.

அண்மையில் தமிழ்நாடு முழுவதிலுமுள்ள பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில் விரிவுரையாளர் பணிக்கான 1058 இடங்களில் கணிசமான வெளி மாநிலத்தவர்கள் குறிப்பாக, பொதுப் பட்டியலில் 68 விழுக்காட்டினர் தேர்வு செய்யப்பட்டுள்ள அநீதி நிகழ்ந்துள்ள நிலையில் தற்போது சாதாரண கிளார்க் பணிகளில் சேரும் வாய்ப்புகளையும் இதுபோன்ற சட்டங்கள் பறிக்கப் பார்க்கின்றன.

மாண்புமிகு முதல்வர் செல்வி ஜெ.ஜெயலலிதா அவர்களின் மறைவிற்கு பின்பு, அரசு ஊழியர்-ஆசிரியர் உள்ளிட்ட தமிழக உழைப்பாளி மக்களுக்கு அவர் அளித்த உறுதிமொழிகள் காற்றில் பறக்கவிடப்பட்டுள்ளதோடு, தமிழகத்தின் நலன்களுக்கு கேடு விளைவிக்கும் திட்டங்களும் நடைமுறைகளும் அமலாக்கப்பட்டு வருவதை தமிழகமே கண்டுவருகிறது. தமிழகத்தில் காலூன்ற கனவு காணும் அரசியல் சக்திகளின் முயற்சிகள் பலனளிக்காது போய்வருகின்ற நிலையில், தமிழகத்தின் நலன்களை பறிக்கப் பார்ப்பதும், அதற்கு தமிழக முதல்வரும், அமைச்சர்களும் மௌனியாக இருந்து தமிழக மக்களின் நலன்களை தங்கள் சுயநலத்திற்காக தாரை வார்த்துக் கொடுப்பதும் கண்டனத்திற்குரியதாகும்.

எனவே, தமிழக முதல்வர் இந்த விஷயத்தில் உடனடியாக தலையிட்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016ல் தமிழக மாணவர்கள் இளைஞர்களின் நலன்களும், வேலைவாய்ப்பு வசதிகளும் பாதிக்காத வகையில் உடனடியாக உரிய திருத்தம் செய்ய வேண்டும் என்றும், தற்போது தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் வெளியிட்டுள்ள குரூப்-4 பதவிகளுக்கான அறிவிப்பை திரும்பப் பெற்று உரிய சட்ட திருத்தம் மேற்கொண்டபின் தமிழக இளைஞர்கள் 100 சதவீதம் வேலை வாய்ப்பு பெறுவதை உறுதி செய்ய வேண்டும் என்றும், இவற்றை செய்யத் தவறினால் தமிழகத்தில் உள்ள அனைத்து தரப்பினரையும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் திரட்டி மேற்படி சட்டத்திருத்தம் கொண்டு வரும் வரை போராட்டக் களம் காண நேரிடும்.

**(மு. அன்பரசு)**
மாநில பொதுச் செயலாளர்